## நிர்மாண உத்தரவாத நிதியத்தின

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்மாண உத்தரவாத நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது பணமாக மாற்றிய பிணை முறிகளாக நிர்மாண சேவை வழங்குனர்கள் 4 பேருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 16,316,700 தொகையினை உரிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிடுவதற்காக கடன்பட்டோர் கணக்கிற்கு வரவுவைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் இலாபத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட பிணைமுறி தொடர்பாக நிறுவனத்துடன் கலந்துரையாடி பொருத்தமான விடயங்களை இணக்கத்திற்கு உட்படுத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தலைவர் தெரிவித்திருந்தார்.

(ஆ) வெளிவாரி சேவைகளின் அடிப்படையில் செலுத்தப்பட்ட ரூபா 8,429,950 கூட்டுமொத்தமான சம்பளங்கள், வேதனங்கள், ஏனைய படிகள் என்பவற்றை ஆளணி வேதனமாக வகைப்படுத்துவதற்குப் பதிலாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவுகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 2.2.1(அ) ஆம் பந்தி | 2000 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான வருடாந்த கணக்குகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2006 யூலை 14 ஆந் திகதிய பீஈடீ 38 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றுநிருபம் | பெறுமதி சேர் வரிக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படாதிருந்ததுடன் உழைக்கும் போதே செலுத்தும் வரியின் கீழ் உத்தியோகத்தர்களிடமிருந்து வரி அறவிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருக் கவில்லை. |
| 2006 ஒக்டோபர் 09 ஆந் திகிதய பீஈடீ 39 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | நிதியத்தின் ஆலோசகருக்கு ரூபா 60,000 மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஒரு வாகனத்தினை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகள் ரூபா 79,682,692 மிகையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 13,584,552 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 66,098,140 ஆல் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. நிதிசார் விளைவுகள் அதிகரிப்பதற்கு பின்வரும் காரணங்கள் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

| வருமான/ செலவு விடயம் | சாதகமான/ (பாதகமான) தாக்கம் |
|---|---|
| பிணை முறிகளின் வருமானம் அதிகரித்தல் | 31,044,097 |
| திறைசேரி உண்டியல் வருமானம் அதிகரித்தல் | 19,638,499 |
| நிலையான வைப்பு வருமானம் அதிகரித்தல் | 1,039,561 |
| கடன்வட்டி வருமானம் அதிகரித்தல் | 202,158 |
| கடன்வட்டி வருமானம் பதிவழித்தல் குறைவடைதல் | 55,442,214 |
| ஐயக்கடனுக்காக கூடுதலாக ஏற்பாடுசெய்தல் குறைவடைதல் | (30,300,000) |
| நானாவித வருமானம் குறைவடைதல் | (424,065) |
| சம்பளமும் வேதனமும் அதிகரித்தல் | (3,417,432) |
| ஏனைய செலவுகள் அதிகரித்தல் | (7,126,892) |
| | 66,098,140 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் நிதிக்கட்டுப்பாட்டாளரின் வழக்கமான கடமையாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பாக ரூபா 150,000 தொகையான மேலதிகக் கட்டணம் நிதியத்தின் முன்னாள் நிதிக்கட்டுப்பாட்டாளருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான அலுவலக வாடகை, பெறுமதிசேர் வரி, மின்சாரக் கட்டணம் என்பவற்றிற்காக ரூபா 7,760,000 தொகை நிர்மாணம், பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு முறைப்படியான வாடகை உடன்படிக்கையின்றி மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டது. மேலும் 500 சதுர அடி அளவுள்ள மேலதிக இடப்பரப்பினை வழங்குதல் என்பதன் கீழ் தலைமை அலுவலகத்தின் வருடாந்த வாடகை ரூபா 120,000 இலிருந்து ரூபா 200,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் மேலதிக இடப்பரப்பினை 2013 ஏப்ரல் மாதம் இறுதிவரை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முறையான கொள்வனவு நடைமுறைகளின்றி தெரிவுசெய்யப்பட்ட வெளி நபர் ஒருவருக்கு 2012-2016 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தினைத் தயாரிப்பதற்காக ரூபா 300,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த கூட்டிணைந்த திட்டத்தினை

முறைப்படி மீளாய்வு செய்து அமுல்படுத்துவதற்கு அல்லது செயலாற்றலினை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்குரிய RAM Credit Rating பருமனளவினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 457,143 செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அத்தீர்மானத்தினை உள்ளடக்கிய இறுதி அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டு பிரசுரிப்பதற்கு இந்த அறிக்கைத் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அச்செலவின் வினைத்திறன் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 நவம்பர் 07 ஆந் திகதி நடைபெற்ற செயலமர்வுகள் தொடர்பாக தனியார் சுற்றுலா விடுதிக்கு ரூபா 225,000 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அச்செயலமர்வின் பிரயாண மற்றும் அமையச் செலவுகளுக்காக ரூபா 75,000 தொகையான முற்பணம் ஒரு பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்தது. சுற்றுலா விடுதிக்குச் செலுத்தப்பட்ட கட்டணத்திற்காக உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் போக்குவரத்து மற்றும் அமையச் செலவுகளுக்காகச் செலவு செய்யப்பட்ட உள்ளபடியான செலவுகளுக்காக பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 300,000 ஆன முழுத்தொகையும் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்ட போதிலும் செயலமர்வுகளுக்காகச் செலவிடப்பட்ட உள்ளபடியான பணம், பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை செயலமர்வின் விளைதிறன் என்பன தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முறைப்படியான கொள்வனவு நடைமுறைகளின்றி மாதாந்தம் வாடகை செலுத்தும் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஒரு மோட்டார் வாகனத்திற்காக 2012 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட மொத்த வாடகை ரூபா 601,500 ஆகும். மேலும் வாகனத்தினைப் பயன்படுத்துதல் தொடர்பான மீற்றர் இலக்கத்துடனான ஓடிய தூரத்தின் அளவு மற்றும் எரிபொருள் பயன்பாட்டினைக் காட்டும் மாதாந்த ஓட்டக் குறிப்புக்களின் விபரம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே வாகனப் பயன்பாட்டின் விளைதிறனை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**3.2 ஆளணி நிர்வாகம்**

மீளாய்வாண்டிற்கான ஆளணிக் கிரயம் கீழே தரப்படுகின்றது.

| | **ஒப்பந்த** | **வெளிவாரி சேவை** | **மொத்தம்** |
|---|---|---|---|
| ஊழியர்களின் எண்ணிக்கை | 3 | 19 | 22 |
| ஆரம்பச் சம்பளம் ரூபா | 2,972,920 | 7,689,679 | 10,662,599 |

| | | | |
|---|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதியம் ரூபா | 407,327 | 740,775 | 1,!48,102 |
| வாழ்க்கைச் செலவுப் படிகள் ரூபா | 240,000 | - | 240,000 |
| ஊக்குவிப்புப் படிகள் ரூபா | 228,500 | 501,150 | 729,650 |
| | --------------- | ---------------- | ---------------- |
| மொத்த கிரயம் ரூபா | 3,848,747 | 8,931,604 | 12,780,351 |
| | ======= | ======= | ======== |
| ஒரு நபருக்கான கிரயம் ரூபா | 1,282,916 | 470,084 | 580,925 |

இப்பதவியணியினர் கிரயம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூலை 08 ஆந் திகதிய பீஈடீபீயூ இலக்க பொது முயற்சிகள் திணைக்கள கடிதத்தின் பிரகாரம் மற்றும் 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்து சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்திற்கு இணங்க அனைத்து அரசாங்க முயற்சிகளினாலும் தமது தாபன கட்டமைப்பை மீளமைக்கப்பட வேண்டியதுடன் ஆட்சேர்ப்பு/ பதவியுயர்வு நடைமுறை, பதவியணியினர், சம்பள அளவுத்திட்டம் என்பவற்றைத் திருத்தம் செய்து தேசிய சம்பளம் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவின் சிபார்சும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பதவியணியினர் தொடர்பான சுற்றுநிருபத்தினை அமுல்படுத்த தேவையில்லை என சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 4 ஆம் விடயத்தின் கீழ் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தமது தற்றுணிபின் பேரில் நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஆ) ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பதவியணியினர் சேவைக் காலத்தினை நீடித்தல் ஒழுங்கான நடைமுறையின் படி இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) வெளிவாரி சேவைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பதவியணியினருக்காக செயலாற்றல் மதிப்பீடு இன்றி சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிணைமுறி விண்ணப்ப படிவங்கள் ஆவணப்படுத்தப்படாதிருந்ததுடன் நிராகரிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்கள் அவ்வாறு நிராகரிக்கப்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு கோவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு நிராகரிக்கப்பட்ட விண்ணப்ப

படிவங்கள் நிராகரிப்பதற்கான காரணம் என்ன என்பது உரிய உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையின் பிரகாரம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தம் வெற்றியளிக்காமையின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டது போல சேவை வழங்குனரினால் வேண்டப்படுகின்ற பிணைமுறிகள், வழங்கப்பட்ட மற்றும் மேற்பார்வை செய்யப்பட்ட உத்தியோகத்தர்களினால் வெளிப்படைத்தன்மையுடன் உரிய பொறுப்புக்களுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதனை புலனாய்வு செய்வதற்கு அல்லது தொழில்நுட்ப கணக்காய்வினை மேற்கொள்வதற்கு அல்லது முடியுமான அளவில் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பந்தம் வெற்றியளிக்காமையின் போக்கானது சர்வதேச ஏற்றுக்கொள்ளலின் ஆகக்குறைந்த அளவான நூற்றுக்கு 0.8 இலிருந்து நூற்றுக்கு 1 வரையான சதவீதமாக இருந்த போதிலும் இது வரை நிறுவனத்தின் மூலம் பிணைகள் வழங்கும் போது ஒப்பந்தம் வெற்றியளிக்காமை நூற்றுக்கு 0.14 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாக தலைவர் தெரிவித்திருந்தார்.

(இ) பின்வரும் விடயங்களின் காரணமாக சில்லறைக்காசு கட்டுநிதிக் கட்டுப்பாடு முறைப்படியாக இருக்கவில்லை.

(I) மீளாய்வாண்டிற்காக சில்லறைக் காசு கட்டுநிதிப் பதிவேட்டினைப் பேணுவதற்கு அல்லது போதியளவில் மேற்பார்வையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(II) மீளாய்வாண்டின் போது வைக்கப்பட்டிருந்த ரூபா 60,000 தொகையான சில்லறைக் காசு கட்டுநிதியிலிருந்து ரூபா 25,000 இற்கு மேற்பட்ட மீதி கையிலுள்ள காசாக வைக்கப்பட்டிருந்தது.

(III) முற்பணங்களைத் தீர்த்துவைப்பதில் வழமைக்கு மாறான தாமதங்கள் காணப்பட்ட போதிலும் அது தொடர்பான மேற்பார்வை இடம்பெற்றிருக்க வில்லை.